Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/’67

Reg. No. KKI/63/2015-2017

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 அவர் எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும் மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார் சங்.135:8 ஜனவரி 2018 No.1

## ஊக்கமான வேண்டுதல்

**Effective Prayer**

Annie Graham Lotz

தேசங்கள் குழப்பங்களோடு காணப்படுகின்றன. இக்குழப்பங்கள் தேவன் விரைவில் திரும்ப வருவதை அறிவிக்கின்றன. நாம் அவரை விட்டு விட்டால் அவரும் நம்மை விட்டு விடுவதாக எச்சரித்திருக்கிறார். நாம் ஆவிக்குரிய வரட்சி காலத்திலிருக்கிறோம். எனவே அவருடைய நாமம் தரிக்கப்பட்ட அவருடைய ஜனங்களாகிய நாம் நம்மைத் தாழ்த்தி அவருடைய முகத்தைத் தேடி நமது பொல்லாத வழிகளை விட்டுத் திரும்ப வேண்டும்; அப்போது தான் தேசத்திற்கு க்ஷேமம் ஏற்பட முடியும்.

இது தேவ பிள்ளைகளின் இருதயத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ஊக்கமான ஜெபமாக அது எழும்ப வேண்டும். நான் என் சொந்த ஜெப வாழ்வில் மிகவும் பெலவீனமாயிருந்தவன். தேவன் நீண்ட காலமாக என்னை நடத்தியிருக்கிறார். அவர் எனக்கு அதிகமாக போதித்து தானியேல் 9-ம் அதிகாரத்தின் மூலமாக தேசத்திற்காக ஜெபிக்க வழி நடத்தினார். தேசத்திற்காக ஜெபிக்க இதை நாம் பயன்படுத்துவது உதவியாயிருக்கும்.

### ஜெபிக்க பலவந்தம் பண்ணப்படுவது

தானியேல் எருசலேமில் பிறந்து வளர்ந்தவன். தேவ கட்டளைப்படி பாபிலோனியர் வந்து எருசலேமைப் பிடித்த போது தானியேல் இளவயதுள்ளவனாயிருந்தான் (teen ager). 2ராஜாக்களின் புஸ்தகத்தின்படி தேவன் நேபுகாத்நேச்சாரையும் பாபிலோனியரையும் யூதாவின் முரட்டாட்டத்தினால் அவர்களை நியாயந்தீர்க்கும்படி அனுப்பினார். அவர்கள் விக்கிரகாராதனையிலும், கீழ்ப்படியாமையிலும் பிடிவாதமாயிருந்தனர். முதல் தாக்குதலில் நேபுகாத்நேச்சார் 200 வாலிபர்களை பாபிலோனுக்கு சிறைபிடித்துச் சென்றான். அதில் ஒருவன் தானியேல். சிறைபிடிப்பின் 67-ம் வருடம் தானியேல் மேற்கூறிய ஜெபத்தை (தானி.9) ஏறெடுத்தார். அவர் எரேமியாவின் புஸ்தகத்தைப் படித்த படியால் இந்த ஜெபத்தை ஆரம்பித்தார். எழுபது ஆண்டுகளுக்குப் பின்பு தேவன் சிறையிருப்பிலிருந்து மக்களைத் திரும்பக் கொண்டு வருவதாகக் கூறியிருந்தார் எரே.29:10-13. தானியேல் இந்த வாக்குத்தத்தத்தைக் கண்டுபிடிக்கிறான். இன்னும் மூன்று ஆண்டுகள் இருந்தாலும் தேவனைத் தேடினால். . . ஆனால் முழு இருதயத்தோடும் தேவனைத் தேடுவது யார்?

எனவே தானியேல் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறார். அது ஒரு வினாடி ஏற்பட்ட உணர்ச்சியோ ஒரு திடீர் கவலையோ அல்ல, அது உடைந்த உள்ளத்திலிருந்து ஏறெடுக்கப்பட்ட ஜெபம். டேவிட் வில்கெர்சன் என்பவர் சொல்லுவது போல அவர் உள்ளம் நொறுங்கிய வேதனையால் நிரப்பப்பட்டவராக ஜெபித்தார். அவர் பிரச்சனைகளை கண்டபடியாலும் தேவ வசனத்தில் வாக்குத்தத்தத்தைப் படித்த படியாலும் ஜெபிக்க பலவந்தம் பண்ணப்பட்டார். தேசம் தேவனைவிட்டு தூரமாயிருந்தது. தானியேல் சிறைபிடிக்கப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின்பு, நேபுகாத்நேச்சர் மூன்றாம் முறை எருசலேமை முற்றுகையிட்டு அதின் மதில்களை இடித்து, தேவாலயத்தை அழித்து, பட்டணத்தை நெருப்புக்கு இரையாக்கினான். மீந்திருந்த மக்களைக் கொன்று குவித்தான். எருசலேம் பட்டணமும், தேவாலயமும் இல்லாமற் போயின. இதனால் மனமுடைந்த தானியேல், பட்டணத்திற்காகவும், தேவாலயத்திற்காகவும், தன் ஜனத்திற்காகவும் மிகுந்த வேதனையுடையவராய், “தேவனே, 70 ஆண்டுகளுக்குப் பின்பு எங்களை விடுவித்து எருசலேமுக்குத் திரும்பவும் அனுப்பி தேவாலயத்தைத் திரும்பக் கட்டச் செய்வேன் என்று வாக்களித்தீரே” என்று ஜெபித்தார். தேவனுடைய வாக்குத்தத்தத்துடன் அன்றைய பிரச்சனையை இணைத்து ஜெபிப்பதைக் காண்கிறோம்.

இங்குதான் ஊக்கமான வேண்டுதல் ஆரம்பிக்கிறது. இது கட்டாயத்தால் ஆரம்பமாகிறது. இவ்வுலகின் பிரச்சனைகளாகிய கோபம், பிரிவினை, பேராசை, போன்றவற்றைப் பார்க்கிறோம். ஆனால் அவற்றை வேதவசனத்தின் வாக்குத்தத்தத்தோடு இணைத்துப் பார்ப்பது அவசியம். இவற்றில் நாம் நன்கு தெரிந்திருப்பது 2நாளா.7:14 என்றால் தவறல்ல. நமது விரல்களால் இதனைச் சுட்டிக் காண்பிக்கிறோம். எளிதான காரியம்தான். தேவன் நாம் நமது பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்புகிறோமா அவைகளை விட்டு விடுகிறோமா என்று பார்க்கிறார். “நான் பரலோகத்திலிருந்து... தேசத்திற்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்”. இந்த வார்த்தையை தானியேல் பிடித்துக் கொண்டார்.

நாம் எதை விரும்பி எதிர்பார்த்து நினைத்து ஜெபிக்கிறோம் என்பதற்கும், தேவனது வாக்குத்தத்தத்தின்படி ஜெபிக்கிறோம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. அவரையும் அவரது வார்த்தையையும் பிடித்துக் கொண்டு ஜெபிக்க வேண்டும். ஊக்கமான வேண்டுதலுக்கான முதல் திறவுகோல் பலவந்தம் பண்ணப்பட்டு ஜெபிப்பதாகும்.

### ஜெபத்தையே மையமாக்குவது

தானி.9:3-ல் “நான் உபவாசம் பண்ணி. . . ஆண்டவரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி” எனப் படிக்கிறோம். ஜெபத்தினால் தேவனையே நோக்குவது என்பது பொருள். விசுவாசம் தேவனுக்கு நேராக ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். உபவாசம் செய்ய வேண்டும். அது உணவு உட்கொள்ளாமலிருப்பது மட்டுமல்ல தேவனுக்கு முழுமையான கவனத்தைச் செலுத்துவதற்குத் தடையாயிருக்கும் எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும். இந்த முயற்சியில் சமயத்தை ஒதுக்கி, நமது முழு கவனத்தையும் அவருக்கு நேராக்குகிறோம். அதோடு இரட்டை உடுத்தி சாம்பலில் உட்காருவது என்பது தாழ்மையைக் காண்பிக்கிறது. “தேவனே உமது உதவி எங்களுக்கு வேண்டும். நீர் உதவி செய்யாவிடில் எங்களுக்கு எந்த உதவியுமில்லை. நீர் தேசத்திற்கு எழுப்புதலைக் கொண்டு வராவிடில் நாங்கள் எழுப்புதலடைய மாட்டோம். எங்கள் தேசத்திற்கு எந்த நம்பிக்கையுமில்லை. தேசம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாகிவிடும். நீர் எங்களுக்கு வேண்டும்”.

தானியேல் ஜெபத்தையே மையமாக வைத்திருந்தான். அவனது ஜெபத்தில் உயர்மொழிநடை வெளிப்படுத்தப்படவில்லை. அவனது ஜெபம் தாழ்மை, உத்தமம், தேவை, தேவனைத் தேடுதல் ஆகியவை அடங்கியதாயிருந்தது. உங்கள் விசுவாசத்தின் முள் தேவனையே நோக்கியிருக்கிறதா? இவ்வித ஜெபம் ஏறெடுக்கப்பட தேவனோடு சமயத்தைத் தனியாக செலவிட வேண்டும். அவரை நோக்கிக் கதற வேண்டும். இவ்வாறு நீங்கள் ஜெபித்ததுண்டா?

### தேவனோடுள்ள நமது உறவில் உறுதி

இது ஊக்கமான ஜெபத்திற்குரிய மூன்றாவது திறவுகோல். 4-ம் வசனத்தில் தானியேல்: “என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி” என்கிறார். தானியேலுக்கு ஒரு உடன்படிக்கையின் உறவு தேவனோடிருந்தது. எருசலேமில்

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)



முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001

Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com



Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## வாக்குத்தத்தம்

ஆபத்து காலத்தில் **என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,** நீ என்னை மகிமைப்படுத்துவாய் சங்கீதம் 50:15.

## வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

வருகையின் தூதன் அன்பு வாசகருக்கு, வருகையின் தூதன் ஊழியக்குடும்பத்தாரின் அன்புடன் கூடிய, மிகவும் **மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்துக்கள்!** 2018-ம் ஆண்டு உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் மிகவும் ஆசீர்வாதமானதாய் அமைய ஜெபிக்கிறேன்.

சங்.50:15 தேவனுடைய தொலைபேசி எண். ஆங்கிலத்தில் fifty fifteen 5015 என்று சொல்வார்கள். வசனத்தை பாதியாக எழுத விரும்பாமல் முழு வசனத்தையும் எழுதியுள்ளேன். ஆனால் நான் வாசகருக்கு வலியுறுத்துகிற காரியம், "**என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்**" என்பதே. எந்த சூழ்நிலையாயிருந்தாலும், என்ன பிரச்சனையானாலும், எப்பேர்பட்ட வியாதியாயிருந்தாலும், அவசர பிரிவில் வைத்திருந்தாலும், மனதின் வியாகுலங்கள், கஷ்டங்கள், நெருக்கங்கள், விட முடியாத பாவ பழக்கவழக்கங்கள் என்றாலும் சரி, "**என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்**" என்கிறார் தேவன், கூப்பிடுவீர்களா?

அதே போல எரேமியா 33:3 தேவனுடைய சரியான Hot line தொலைபேசி எண். அதை 333 என்பார்கள். "**என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்**".

அப்படியாக வாக்குக் கொடுத்தவர், இப்படியாக கூறுவது ஏன்? "அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறு உத்தரவு கொடுக்க மாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காண மாட்டார்கள்" நீதி.1:28.

அதற்கான காரணத்தை தேவனே கூறுகிறார்: அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்கு பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற் போனார்கள்.

என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்து கொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள் நீதி.1:29,30.

**ஆலோசனை 1.** அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார் மத்தேயு 16:24-26. "**சிலுவையே மோட்சம்**", இன்று இதை சிந்திப்பது யார்?

**ஆலோசனை 2.** "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்" உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு (மத்.28:19,20). இதை பிரதான கட்டளை (Great commendment) என்பார்கள்.

இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கெட்டிக் கிடக்கும் குளத்துத் தண்ணீரைப் போலவும், தண்ணீர் வெளியேறாத **சவக்கடல்** போலவும் காணப்படவில்லையா? **போ அல்லது அனுப்பு.**

**ஆலோசனை 3** . . . . .இதோ, வெண்மையான வஸ்திரந் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று:

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் அப்.1:10,11. இன்றைய கிறிஸ்தவர்களோ, இயேசு கிறிஸ்து **போனால் என்ன, வந்தால் என்ன** என்பது போல் ஜீவிக்கிறார்கள். "நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள். ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப் போட்டது. லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்; ஜனங்கள் **புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்**" லூக்கா 17:27,28.

மனுஷ குமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும் லூக்கா 17:30.

## உபவாச ஜெபங்கள்

என்னுடைய மூத்த சகோதரன், காலஞ்சென்ற திரு. D.T.ராஜா அவர்கள் குமரி மாவட்டத்திலுள்ள கோதையார் போன்ற இடங்களின், மலைகளில் வாழும் "**காணிக்காரர்**" என்ற பழங்குடியினர் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்யஆரம்பித்த பொழுது, "**கல்லில் நார் உரிக்க முடியுமா?**" என்றார்கள். அந்த மக்கள் கூட்டத்தினர், வில்லும் அம்பும் பிடித்தவர்களாய், அரைகுறை ஆடையுடன் காணப்பட்டார்கள். நம்மை பார்க்கும்போது ஓடி ஒளிவார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

| மாதம் | தேதி | இடம் | பிரயாண செலவு |
|---|---|---|---|
| ஜனவரி | 27-01-2018<br>4-வது சனி | E.W.M. Prayer House,<br>புதுக்கோட்டை | 6,000 |
| பிப்ரவரி | 17-02-2018<br>3-வதுசனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>கோயம்பத்தூர் | 6,000 |
| மார்ச் | 17-03-2018<br>3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>அரியா குப்பம், பாண்டிச்சேரி | 7,500 |
| ஏப்ரல் | 14-04-2018<br>2-வது சனி | தமிழ் மெதடிஸ்ட் சபை,<br>மும்பை | 15,000 |
| மே | 19-05-2018<br>3-வது சனி | கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபை,<br>தஞ்சாவூர் | 7,500 |
| ஜூன் | 16-06-2018<br>3-வது சனி | பெங்களூர் | 10,000 |
| ஜூலை | 21-07-2018<br>3-வது சனி | நன்மலை ஆராதனை சபை,<br>நெல்லிக்குப்பம், கடலூர் | 7,000 |
| ஆகஸ்ட் | 18-08-2018<br>3-வது சனி | விசுவாச ஜெப சபை,<br>கல்லக்குறிச்சி, விழுப்புரம் | 7,000 |
| செப்டம்பர் | 15-09-2018<br>3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>தேனி | 4,000 |
| அக்டோபர் | 18-10-2018<br>3-வது வியாழன் | அந்தமான் | 40,000 |
| நவம்பர் | 17-11-2018<br>3-வது சனி | திருவனந்தபுரம் | 4,000 |
| டிசம்பர் | 01-12-2018<br>1-வது சனி | விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபை,<br>வடக்கன்குளம், நெல்லை மாவட்டம். | 1,000 |


**வருட சந்தா ரூ.100.00**

சந்தா, காணிக்கை, கடிதங்கள், விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**வருகையின் தூதன்**

நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001

VARUKAYIN THOOTHAN

Newport Street, Nagercoil-629 001.

**Mobile:** 95432 21008

**வங்கி கணக்கு எண்**

VARUKAYIN THOOTHAN

A/c. No.:431521036

Indian Bank,

W.C.C. Road, Nagercoil-1

IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

email:

Varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்த அவருக்கு யூத முறைமைப்படி சடங்குகள், பலிகள், போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன் படிக்கை நன்கு அறியக் கூடியதா யிருந்தது. எனவேதான் தேவனுக்கு ரியவர் என்றும் தேவன் தனக்குரியவர் என்றும் அறிந்திருந்தார். இயேசு இவ்வுலகில் வாழ்ந்து சிலுவைக்குச் செல்லுமுன்பாக புதிய உடன்படிக் கையை ஏற்படுத்த வந்தேன் என்றார். ஆனால் பழைய உடன்படிக்கையை அவர் அழிக்கவில்லை. அவற்றை அவர் நிறைவேற்றி விட்டார். அவரது இரத்தத் தால் புதிய உடன்படிக்கையை ஏற்படுத் தினார்.

பஸ்காவின் அர்த்தமென்ன? தேவன் மோசேயைப் பார்த்து, இஸ்ர வேல் மக்களை விட்டு விடும்படி பார்வோனிடம் சொல்ல பத்துமுறை கூறினார். இறுதியில் அவர் ஒரு தூதனை அனுப்பி எகிப்தியரின் தலைச்சன்களை அழிப்பதாகக் கூறினார். கோபம் நிறைந்த தேவனிடமிருந்த இரக்கத்தால் இஸ்ரவேலர் பாதுகாக்கப்பட்டனர். அவர்களில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை எடுத்து வீட்டு நிலைக்கால்களில் பூசின இல்லங்களில் சங்கார தூதன் பிரவேசிக்க வில்லை. எனவே ஆட்டுக்குட்டியான வராகிய இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புக்குத் தப்ப முடியும்.

புதிய ஏற்பாட்டில் இயேசு யோர் தான் நதிக்கரையில் நடந்து செல்வதை யோவான் ஸ்நாபகன் பார்த்து "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா.*1:29*) என்றான். இயேசு சிலுவையில் தேவ ஆட்டுக்குட்டியாக நமது பாவங்களுக் காகத் தன்னை பலியாக ஒப்புக் கொடுத் தார். நாம் அவரை நமது இரட்சகராக ஏற்கும்போதும் அவரில் நமது விசு வாசத்தை வைக்கும்போதும் அவர் தமது இரத்தத்தை நமது இருதய நிலைக் கால்களில் பூசி நியாயத் தீர்ப்புக்குத் தப்புவிக்கப்படுகிறோம்.

சிறு வயதிலே நான் அப்படிச் செய்தேன். அவர் எனக்காக மரித்தார் என்று அறிந்து அவரை என் உள்ளத்தில் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டேன். இதைக் குறித்து எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் நான் அந்த நிமிடமே அவருடைய பிள்ளையாக மாறிவிட்டேன் என்று விசுவாசிக்கிறேன். அதே வினாடியில் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நித்திய ஜீவன் அளிக்கப்பட்டு, தேவ னோடு ஒரு நெருங்கிய உறவும் ஏற்பட் டது. பரலோகம் எனக்காகத் திறந்து அளிக்கப்பட்டது. தேவன் என்னோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி விட்டார். எனவே தேவன் எனக்குரியவர் மட்டுமின்றி நான் அவருக்கு சொந்த மாகி விட்டேன்.

எவரும் ஜெபித்து பதிலைப் பெறலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலம் ஒரு உடன்படிக்கையின் தொடர்பு இருக்கும்போது மட்டுமே நாம் கேட்கும் ஜெபத்திற்கு பதில் கிடைக்க உத்தர வாதம் உண்டு. நீங்கள் ஒரு உடன்படிக் கையின் தொடர்பு இயேசுவுடன் வைத்திருக்கிறீர்களா? எப்போது சிலுவை யண்டை சென்றீர்கள்? உங்கள் பாவங் களுக்காக மனம் வருந்தி அறிக்கையிட்டு அவருடைய இரத்தம் உங்கள் இருதய நிலைக்கால்களில் பூசும்படி கேட்டீர் களா? அப்படிச் செய்திருந்தால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். இயேசு உங்கள் நியாயத்தீர்ப்பை எடுத்து விட் டார். சங்கார தூதன் உங்களைக் கடந்து போய் விட்டான். நீங்கள் நித்தியத்தில் பிதாவின் வீட்டில் அவரது அருகில் செல்ல முடியும். ஏனெனில் நீங்கள் அவரது பிள்ளை. அவருக்கு உங்களோடு ஒரு உடன்படிக்கையின் உறவு இருக் கிறது. அவருடைய இரத்தத்தால் கிரயத் திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறீர்கள்.

**தேவனுடைய குணாதிசயத்தில் உறுதி**

தானி.*9:4*-ல் "ஆண்டவரே உம் மில் அன்பு கூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களுக்கு உடன்படிக்கையையும், கிருபை யையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமு மான தேவனே" என்று தானியேல் ஜெபிக்கிறான். தேவன் உத்தமர் என்ப தில் அவன் உறுதியாயிருந்தான். அரசரு டைய உணவை உண்ண அவன் மறுத்த போதும் தேவன் அவனுக்கு உத்தமரா யிருந்தார். பல வருட பயிற்சிகளுக்குப் பின்பு மற்றவர்களை விட அவன் சிறந்த ஞானியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு அரச சபையில் கொண்டு வரப்பட்டான். நேபுகாத் நேச்சார் சொப்பனம் கண்ட போது அதை விளக்குவதற்காக ஒருவரும் முன்வராதபோது அரசன் அனைத்து ஞானிகளையும் கொல்லத் திட்ட மிட்டான். தானியேல் ஒரு இரவு தவணை கேட்டு நண்பர்களோடு ஜெபித் தான். தானியேலுக்கு தேவன் சொப்பனத் தையும் அர்த்தத்தையும் விளக்கினார். எனவே ஞானிகளின் உயிர் காக்கப் பட்டது. தானியேல் அரசின் இரண்டா வது நிலைக்கு உயர்த்தப்பட்டான். அவனது வாழ்வில் உத்தமராயிருந்தார்.

தானியேல் 6-ம் அதிகாரத்தில் தரியு ராஜாவாயிருக்கிறார். தானியேலை ராஜ்யமுழுமைக்கும் அதிகாரியாக்க திட்டமிடுகிறார். பிற அதிகாரிகள் பொறாமையடைகின்றனர். அவனில் குற்றம் கண்டு பிடிக்க முயற்சிக்கின்றனர். அவன் தினமும் 3 முறை ஜெபிக்கிறவன், அதனால் ராஜாவைத் தவிர வேறு எவரையும் நோக்கி ஜெபிக்கிறவர்கள் சிங்கங்களின் கெபியில் போடப்பட உத்தரவாகிறது. ஆனால் தானியேல் வழக்கம்போல 3 முறையும் தேவனை நோக்கி ஜெபித்தபடியால் சிங்கங்களின் கெபியிலே இடப்பட்டான். அடுத்த நாள் காலையில் ராஜா குகையினருகில் வந்து "தானியேலே. . .நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவரா யிருந்தாரா?" தானி.6:20 என்று கேட்கிறார். பதிலாக அவன் "ராஜாவே நீர் என்றும் வாழ்க, சிங்கங்கள் என்னைச் சேதப் படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்" என்றான் தானி. *9:21-22*. தேவன் உண்மையுள்ளவர். தன் அனுவத்தில் அவர் உண்மையுள்ளவர் என்று அவன் அறிந்தான். அவர் அனை வருக்கும் உத்தமர்.

தானியேல் அவரது நீதியைக் குறித்தும் உறுதியாயிருந்தான். "ஆண்ட வரே நீதி உமக்கே உரியது" என்று தானி. *9:7*-ல் கூறுவதை வாசிக்கிறோம். அவர் நீதியுள்ளவர், நேபுகாத்நேச்சாரைக் கொண்டு எருசலேமை அழித்தது சரியா னது. இதை நாம் ஒத்துக் கொள்வது கடினம். ஆனால் தேவன் அனுமதித்தார். அவர் தவறு செய்வதில்லை. அதுபோல சிலுவையை நாம் பார்க்கும்போது தேவனுடைய நீதியைப் பார்க்கிறோம். அவர் பாவத்தை அனுமதியார். பாவத் திற்கு தண்டனை உண்டு.

தேவனுடைய நற்குணத்தைக் குறித்து அவன் உறுதியுடையவனா யிருந்தான். "ஆனாலும் எங்கள் தேவனா கிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு" தானி.*9:10*. சிலுவையில் தேவன் இயேசுவின் மீது நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தினார். இயேசு நம் அனைவருடைய பாவங் களுக்காகவும் அந்த நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். ஒருபுறம் அவரு டைய நீதியும் நியாயத்தீர்ப்பும்; மறுபுறம் அவருடைய இரக்கங்களும் நற்குணமும். யோவேல் 2:12-14 வசனங்களில் இப்பொ ழுதே நீங்களும் நானும் நமது சகல பாவங்களோடும் முழு இருதயத்தோடு அழுகையோடும் கண்ணீரோடும், நமது இருதயத்தைக் கிழித்து அவரிடம் வந்தால் தேவன் நம்மிடம் திரும்பி ஆசீர்வாதங் களைக் கட்டளையிடுவார். அவர் இரக்க முள்ளவர்; அவர் நல்லவர். நம் பிதா நல்லவர், அவர் எப்போதும் நல்லவரே.

தேவன் மகா பெரியவர் என்ற நிச்சயம் தானியேலுக்கு இருந்தது. "உமது ஜனத்தைப் பலத்த கையினால் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி உமக் குக் கீர்த்தியை உண்டாக்கின எங்கள் தேவனாகிய ஆண்டவரே. . ." *9:15*. இன்னும் இதைப் போல செய்வீராக. பார்வோன் இஸ்ரவேல் மக்களை விட்டு விடச் செய்தவர் நீர், பெர்சிய அரசன் அவர்களை வழிவிட்டனுப்பச் செய்தவர் நீர். அவர் பெர்சியாவையும் யூதாவையும் மாற்றக் கூடியவரும், எருசலேமின் இடிந்த மதில்களைக் கட்டி எழுப்பக் கூடியவருமாயிருந்தால் ஏன் நமது தேசங்களில் வந்து விசுவாசத்தின் அஸ்தி பாரத்தைப் போடக் கூடாது? அவரு டைய வல்லமையும் மகத்துவமும் குறைந்து போகவில்லை. அது செல வழிந்து போகவுமில்லை. அவர் இன்றும் அதே விதமாக வல்லமையும், மகத்துவ மும், நித்தியதன்மையும், சர்வ வல்லமை யுமுடையவராயிருக்கிறார். சிருஷ்டிப் பின் காலத்தில் இருந்ததுபோலவும், நோவா, மோசே, தாவீது, தானியேல் ஆகியோரின் நாட்களில் இருந்தது போல வும் இருக்கிறார். ஆண்டவராகிய இயே

சுவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர் இன்றும்ஜீவிக்கிறார். அவருக்குக் கூடாதது ஒன்றுமில்லை.

எனவே தானியேல் உடன்படிக்கையின் உறவுடனும், அவரது குணாதிசயத்தின் உறுதியுடனும் ஜெபித்தான். நீங்கள் யாரிடம் ஜெபிக்கிறீர்கள்? அவரது குணம் உங்களுக்குத் தெரியுமா? வேதத்தில் விளக்கப்பட்டது போன்ற பண்புகளை அவரிடம் காணலாம். ஆண்டவராகிய இயேசுவில் வெளிப்பட்ட நபரத்துவம் அவரிலுண்டு. தேவனைக் காண ஆண்டவராகிய இயேசுவைப் பாருங்கள். அவரது சத்தத்தைக் கேட்க அவரது வசனத்தை வாசியுங்கள். இவைகளை அறிந்திருந்த தானியேல் முழங்காலில், முகம் தரையில்படதன் ஜனத்தின் பாவத்தை அறிக்கையிட்டான்.

### பாவ அறிக்கை

தானியேல் பன்மை வார்த்தையை பயன்படுத்துவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக 5-ம் வசனத்தில் 'நாங்கள் பாவஞ்செய்து. . . அகன்று போனோம்' என்று தொடருகிறது. இறுதியாக 20-ம் வசனத்தில் 'இப்படி நான் சொல்லி, ஜெபம் பண்ணி என் பாவத்தையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு' 9:20 என்று படிக்கிறோம். தானியேல் ஒரு விசேஷித்த மனிதன். மக்கள் அவனிடம் எந்தக் குறையையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் தினமும் 3 முறை ஜெபித்தது ஒரு குற்றமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. தானியேல் தனது பாவத்தையும் தேசத்தின் பாவத்தையும் அறிக்கையிட்ட பின்பு இறுதியாக "இப்படி நான் சொல்லி ஜெபம் பண்ணி என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டேன்" 9:20 என்கிறார்.

உங்கள் பாவங்களை அறிக்கையிட்டிருக்கிறீர்களா? ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக நான் 10 நாட்களைப் பிரத்தியேகப்படுத்தி ஒரு கூடுகையில் எழுப்புதலைக் குறித்து 7 செய்திகள் கொடுக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். முதல் நாள் பிரயாசப்பட்டும் எதையும் செய்ய முடியவில்லை. அடுத்த நாள் காலையிலும் பிரயாசப்பட்டேன் பயனில்லை. "தேவனே இந்த செய்திகளை நான் ஆயத்தம் பண்ணி ஆக வேண்டும், எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்தேன் ஆயினும் எந்த பயனும் ஏற்படவில்லை. நான் ஏமாற்றமடைந்தேன். அப்போது என் காதுகளில் ஒரு மெல்லிய சத்தம் கேட்டது, "**ஆனி, நான் செய்தி களைப் பற்றிப் பேச விரும்பவில்லை, உன்னைப் பற்றி பேச விரும்புகிறேன்**". உடனே நான் "தேவனே என்னைப் பற்றி பேச நான் விரும்பவில்லை. செய்திகளைப் பற்றியே பேச வேண்டும், செய்திகளை ஆயத்தம் பண்ணிய பின்பு என்னைப்பற்றிப் பேசலாம்" என்றேன். நிசப்தம் நிலவியது. நாம் தேவனை தள்ளி விட முடியாது. எனவே நான் முழங்காலில் நின்று, "ஆண்டவரே, நீங்கள் விரும்பு கிறதைக் குறித்துப் பேசலாம்" என்றேன்.

ஒரு துண்டு பிரதியை நான் படித்தபோது அதில் சில பாவங்கள் குறிப்பிடப்பட்டு அவை மூன்று முறை வாசிக்கப்பட வேண்டும் என எழுதப்பட்டிருந்தது. நான் முதல் முறை வாசித்தபோது அதில் எந்தப் பாவமும் நான் செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. இரண்டாவது முறை வாசித்தபோது சில பாவங்கள் என்னில் இருப்பதை உணர்ந்தேன். மூன்றாம் முறை படித்தபோது ஏறக்குறைய எல்லாப் பாவங்களும் என்னிலிருப்பதைக் கண்டேன். நான் முகங்குப்புற தேவனுக்கு முன்பாக விழுந்தேன். இது 10 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. நான் வீட்டை விட்டு வெளியே 30 ஆண்டுகள் தேவ பணி செய்திருந்தேன். ஏழு நாட்கள் கண்ணீரோடு பாவ அறிக்கை செய்தேன். வேதத்தைத் திறக்கும் போதெல்லாம் பாவ உணர்வு ஏற்பட்டது. இறுதியாக தேவன் என்னோடு பேசினார். "ஆனி, சரி, நான் உன்னைக் கழுவி விட்டேன், நீ என்னோடு சரியாகி விட்டாய்" என்றார். நான் ஸ்நானம் செய்து விட்டது போன்ற புத்துணர்வைப் பெற்றேன். மூன்று நாட்களில் செய்திகளை ஆயத்தம் செய்து விட்டேன். கூடுகைக்கு சென்று ஆவிக்குரிய செய்திகளை அளித்தேன். தேவனோடுள்ள தொடர்பில் வலுவும் என் வாழ்வில் வல்லமையும் இருப்பதை உணர்ந்தேன்.

### தனிப்பட்ட பாவங்களுக்கான மனந்திரும்புதல்

நன்றிக்கேடு, வேத வசனத்தைப் புறக்கணித்தல், அவிசுவாசம், ஜெபக் குறைவு, பெருமை, பொறாமை, விமர்சன ஆவி, தூஷணம், பொய், மாய்மாலம், கோபம், எரிச்சல், முரட்டாட்டம் போன்ற பாவங்கள் நம்மிலுண்டா என்று தேவன் காண்பிக்க இடமளிக்க வேண்டும்.

இவை தவிர இன்னும் பல பாவங்களை நாம் செய்திருக்கலாம். இந்த மேற்கூறிய எனது அனுபவத்திற்கு முன்பாக 3 நிமிடங்களில் என் பாவ அறிக்கை முடிந்து விடும். ஆனால் இம்முறை 7 நாட்கள் நான் பாவ அறிக்கை செய்தேன்.

### தேசத்தின் பாவத்திற்காக பாவ அறிக்கை

நமது பாவத்தை அறிக்கையிட்ட பின்பு நாம் தேசத்தின் பாவத்திற்காக ஜெபிக்க வேண்டும். நாம் அனைவரும் பாவிகள். சிலுவையின் மூலமாகவே இரட்சிப்பைப் பெற்றோம். எனவே வெளியே சென்று அவர்கள் மீட்பைப் பெற வழியைக் கூற வேண்டும். இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார் என்பது அறிவிக்கப்பட வேண்டும்.

தேசத்தின் பாவங்களையும் ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு ஜெபிக்கலாம். தொடர்ந்து நாட்டுக்காக ஜெபிக்கலாம்.

### பரலோகம் அசைகிறது

தானி.9:16,19 வசனங்களில் அவரது ஜெபம் முடிவடைகிறது. தேவன் ஜெபத்தைக் கேட்டு பதிலளித்தார். அவரது ஜெபம் நமக்கு மாதிரியாயிருக்கிறது.

தானியேலின் ஜெபத்திற்கு பதில் வந்தது. தேவன் தூதனை தானியேலிடம் அனுப்பினார். அப்போது தானியேல் சொன்ன வார்த்தைகளை 9:20-23 வசனங்களில் பார்க்கிறோம்.

தானியேலைப் போல மக்களுக்காகத் திறப்பின் வாயிலில் நிற்கும்போது நீங்கள் கனப்படுத்தப்படுவதில்லை, ஆனால் வானம் திறக்கப்பட்டு நீங்கள் கனம் பெறுவீர்கள்.

வானம் அசைக்கப்பட்டது. தானியேலின் தேசத்தில் மாற்றம் ஏற்பட்டது. அது உடனடி ஏற்பட்ட மாற்றமல்ல. தானியேல் ஜெபித்து 3 ஆண்டுகளுக்குப் பின்பு பெர்சிய அரசன் கோரேஸ் பாபிலோனின் சிறைக் கைதிகளை விடுவித்தான். அவர்கள் பிரயாணத்திற்குப் பண உதவியும், தேவாலயத்தையும் பின்பு மதில்களையும் கட்ட உதவி செய்தான்.

நமது தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். பதில் தருகிறவர், அதிசயங்களைச் செய்கிறவர். அவருடைய வார்த்தையின்படி அவரிடம் வந்தால் (2நாளா. 7:14) அவர் தேசத்திற்கு க்ஷேமத்தைத் தருவார். இப்போதே அவரை விசுவாசிப்போம். அவரது மகிமையை அவர் அனுப்பி மக்களின் இருதயங்களை எழுப்பும்போதும் அவர் வருகை நெருங்கி வரும்போதும் அவர் நம்மில் செயல்பட்டதை அறிவோம். அவரது திட்டத்தில் பங்குள்ளவர்களாய் முழங்காலிலும், முகம் தரையில் படும் நிலையிலும் ஜெபித்த ஜெபம் வீண் போகாது. அவரது பதில் அவரது ஆச்சரியமான கிருபையை வெளிப்படுத்தும்.

**வாசகர் கடிதம்**

இவ்வருடம் முழுவதும் வருகையின் தூதன் ஒழுங்காக வந்துள்ளது, கர்த்தருக்கும் தங்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். தூதனை வாசிப்பது எனக்கு எழுப்புதலாகவும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாகவும் உள்ளது. எழுப்புதலுக்காக இதயக் கதறலுக்காக ஜெபிக்கிறேன். தேசத்திற்காக மன்றாடி ஜெபிக்கிறேன். என் மகள் குடும்பத்தில் எப்பொழுதும் பிரச்சனையாகவே உள்ளது. . . தயவு செய்து மகள் குடும்பத்திற்காக ஜெபிக்கும்படி கிறிஸ்துவுக்குள் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சகோதரி A.J.,மதுரை

**ஜனவரி மாத உபவாச ஜெபம்**

Heart Cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் - 2018**

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 27-01-2018
4- வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : E.W.M. ஜெப வீடு,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை

தொடர்பு : பாஸ்டர் T.M.அலெக்ஸ் பாண்டியன்
மொபைல் : 98434 86456

# ஆண்டவரே, இறங்கி வாரும், நாங்கள் உமக்கு எதிராகத் தவறு செய்து விட்டோம்

**Come down Lord ! we have wronged you**

Roger Ellsworth

*வேதபகுதி ஏசா.64:5-7 (வாசிக்க)*

தேவன் இறங்கி வந்து தமது ஜனத்தை சந்திக்கும்படி விவாதத்தைத் தொடருகிறார். ஏன் தேவன் தமது ஜனங்களிடமிருந்து பின்வாங்கி தமது முகத்தை மறைக்க வேண்டும்? இப்பகுதியில் ஏசாயா "நாங்கள் பாவம் செய்தோம்" என்று கூறிவிடுகிறார். சிறிது நேரத்திற்குப் பிறகு ". . . .தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப் பண்ணுகிறீர்" என்கிறார்.

தேவனைத் தவறவிடுவதும் பின்பு அவரது தேவையை உணருவதும் இங்கு பேசப்படுகிறது. தேவனுக்காகக் காத்திருப்பதும் அவரை சந்திக்கச் செல்வதும் தேவை. இவை நமது பாவத்தினால் வருகின்றன என்பதை நாம் உணர வேண்டும். இது மிக முக்கியமானது. நாம் பாவத்தை விட்டு விலகாவிட்டால் எழுப்புதலைக் குறித்தும் நாம் பேசக் கூடாது.

முற்காலங்களில் ஒரு அரசன் தனது ஜனங்களை சந்திக்க முற்படும் போது ஒரு முன்னோடியை அனுப்பி அவனது வருகையை முன்னறிவிப்பது வழக்கம். ஜனங்கள் ஒரு 'ராஜபாதையை' அமைத்து அவரது வருகைக்காக ஆயத்தமாவார்கள். பள்ளத்தாக்குகளை நிரப்பி, குன்றுகளை மட்டமாக்கி, கோணலான பாதைகளை நேராக்கி, கரடுமுரடான பாதைகளிலிருந்து கற்களையும், வேர்களையும் அகற்றுவார்கள். பாதை ஆயத்தமான பின்பு அரசர் வருவார்.

தேவன் வந்து நம்மை சந்திக்க விரும்புகிறார். நமது வாழ்க்கைகளையும், சபைகளையும் அவரது மகிமையின் பிரசன்னத்தால் நிரப்ப விரும்புகிறார். அதற்காக நாம் பாதையை செவ்வை பண்ண வேண்டும். அவரது ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் பணியிருக்கிறது. பாவ ஈடுபாட்டின் பள்ளங்கள் நம் ஒவ்வொருவரிலும் நிரப்பப்பட வேண்டும். பெருமையாகிய குன்றுகள் நம்மில் தகர்க்கப்பட வேண்டும். அவரது சித்தத்திலிருந்து விலகிய கோணலான பாதைகள் நேராக்கப்பட வேண்டும். இச்சை, பொறாமை, கோபம், பேராசை போன்ற கற்களும் வேர்களும் அகற்றப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்பட வேண்டிய பணிகள் உண்டு. ஏசா.40:3,5 வசனங்கள் வாசிக்க.

ஆனால் பாவத்தைப் பரிகரிப்பது எளிதல்ல. 'நான் தவறு செய்து விட்டேன்' என்று சொல்வது நம்மில் எவருக்கும் எளிதல்ல. திருமண வாழ்வில் அடிக்கடி இடையூறுகள் வருவதற்கான காரணம் இந்த வார்த்தைகள் வெளிவராதபடியினால்தான். நட்புகளிலும் சந்தேகமும் விறைப்பும் இக்காரணத்தினால்தான் ஏற்படுகின்றன. இவ்வார்த்தைகள் வெளிப்படுத்தப்படாததால் சபைகள் செயலற்றுப் போகின்றன. அவை சொல்வது கடினமாயினும் அவை இருதய பூர்வமாக சொல்லப்பட வேண்டும். ஏசாயாவிடமிருந்து கற்றுக் கொள்வோம். அவன் ஒரு உண்மையான பாவ அறிக்கையை செய்கிறார். அதன் மூலம் உத்தம மனந்திரும்புதலின் பகுதிகளை நமக்குக் காண்பிக்கிறார்.

### 1. பாவத்தை வெளியரங்கமாக்குதல்

எளிய பாஷை நடையில் ஏசாயா பாவம் எவ்வாறு பரவிக் கிடக்கிறது என்பதைக் காண்பிக்கிறார். பாவம் அவர்களை மேற்கொண்டு விட்டபடியால் அவர்களது செயல்பாடுகளில் அதன் அழுக்கு வெளிப்படையாகி விட்டது.

இந்த தீட்டான செயல்களை ஏசாயா இருவிதங்களில் பார்க்கிறார். 1.முதலில் அதற்கான ஆதாம் - நமது இயற்கையின் அசுத்தம். 'நாங்கள் தீட்டானவர்கள் போலிருக்கிறோம்'. நமது பாவ நடவடிக்கைகள் நாம் இயற்கையாகவே பாவிகளாயிருப்பதால் அவற்றிலிருந்து துளிர்விடுகிறது. நீரூற்று அசுத்தமாயிருந்தால் நீரோடையும் அசுத்தமாகவேயிருக்கும்.

நாம் மனிதனுடைய அடிப்படை நற்குணத்தைப் பற்றி பேசுகிறோம். அவன் பாவம் செய்யும் போது "அதுஅவனுடைய கல்விக் குறைவாலோ, சூழ்நிலையாலோ ஏற்படுகிறது. எனவே மனிதனுடைய மிகப் பெரிய தேவை சீரமைக்கப்பட்ட பள்ளிகளும், நல்ல சமுதாயமுமாகும். மனிதனுடைய பாவத் தன்மையைப் போதிப்பது மனிதனுக்குத் தீமையானது. அது அவன் தன்னைக் குறித்துத் தாழ்வாகக் கணக்கிடச் செய்கிறது. எனவே மனிதனுக்குத் தேவையான இரட்சிப்பு பாவத்திலிருந்து அல்ல, சுய மதிப்பிலிருந்து" என சிலர் கூறுகின்றனர்.

பாவம் செய்து கொண்டே போகும்போது அதன் விளைவை மனிதன் அறுத்தே ஆக வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டவர்கள். ஆயினும் அவர்கள் பிறந்த பாவ இயற்கை இன்னும் அழிக்கப்படவில்லை. அது வல்லமையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல 'நிர்பந்தமான மனிதன் நான்' என்று அடிக்கடி கதற வேண்டியவர்களாயிருக்கிறோம் ரோ.7:24.

'எங்கள் நீதியெல்லாம் அழுக்கான கந்தை போலிருக்கிறது' என்கிறார் ஏசாயா. இந்த வாக்கியம் "சகோதரரே, நமது நீதி இவ்வளவு மோசமாயிருந்தால் நமது அநீதி எத்தகையதாயிருக்கும்"? என்று சார்லஸ் ஸ்பர்ஜன் சொல்ல ஏதுவாகிறது.

நமது பாவத்தன்மை ஆழமாகப் புதைந்திருப்பதால், நாம் செய்கிற யாவற்றையும் தொட்டு அழுக்கடையச் செய்கிறது. "நமது தூய்மையிலும் பாவம் இருக்கிறது, நமது விசுவாசத்திலும் அவிசுவாசம் இருக்கிறது, நமது அன்பில் வெறுப்பு இருக்கிறது, நமது தோட்டத்திலுள்ள அழகிய மலரில் சர்ப்பத்தின் விரும்பத்தகாத பசை காணப்படுகிறது" என்று சார்லஸ் ஸ்பர்ஜன் மீண்டும் குறிப்பிடுகிறார்.

மேலும் வச.7-ல்"உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்கு விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை" என்று பார்க்கிறோம்.

எனவே மக்களின் அழுக்கான நடபடிக்கையுடன் அவர்களின் இருதயத்தின் குளிர்ச்சியையும் அறிக்கையிடுகிறான். தேவனை ஜெபத்தின் மூலமாகப் பிடித்துக் கொள்வதும், பாவமன்னிப்பை நாடுவதும், அவரது வாக்குத்தத்தங்களை வேண்டுவதும் மட்டுமே இன்றியமையாதவை. இதற்கு முயற்சி வேண்டும். ஒருவர் தன்னை இதற்காக முயற்சியில் ஈடுபடுத்த வேண்டும். தன்னிலுள்ள பாவத்தை வெறுக்க வேண்டும். தன் சொந்த வழியை விட்டு விட வேண்டும். ஆனால் ஏசாயாவின் தலைமுறையினர் இவ்வாறு செய்ய அவர்கள் ஆயத்தப்படவில்லை. அவர்கள் தூக்க மயக்கத்திலிருந்தபடியால் அவர்களால் எழும்ப முடியவில்லை.

ஆல்பர்ட் பார்னஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "ஒருவரும் முயற்சியின்றி தேவனிடம் உயர்த்தப்பட முடியாது. இந்த முயற்சியில் மனிதன் ஈடுபடாவிட்டால் பாவத்தின் மதியீனத்தில் விழுந்து விடுவர். இது ஒரு தூக்க மயக்கத்திலிருப்பவன் ஆழ்ந்த தூக்கத்தில் விழுந்து விடுவதற்கு ஒப்பாகும்".

இப்படிப்பட்டவர்கள் சாத்தானுடைய பயங்கரமான பிடிக்குள் அகப்பட்டு விட்டார்கள். ஒருபுறம் அவர்கள் சகலவித அசுத்தங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். மறுபுறம் அவர்கள் ஆண்டவருக்கு நேராகக் குளிர்ந்த நிலையில் காணப்படுகிறார்கள். செய்ய வேண்டியவைகளைச் செய்யாத பாவமும், செய்ய வேண்டாதவைகளைச் செய்கிற பாவமும், தீமை செய்வதும் நன்மை செய்யாதிருப்பதும்! தவறான செயல்களின் இணைப்பு! இன்று தேவ பிள்ளைகள் இந்த செயல்களை மறுபடியும் மறுபடியும் செய்கிறார்கள். உண்மையான மனந்திரும்புதலைப் பெற்றவர்கள் செய்ய வேண்டியதை மட்டும் செய்வார்கள்.

### குற்றத்திலிருந்து அதிகாரப்பூர்வமான விடுதலை

தேசத்தில் பரவிக்கிடந்த பாவத்தைக் கண்ட ஏசாயா நியாயத் தீர்ப்பு வெளிப்படுவதை அறிக்கையிடுகிறான். "தேவரீர் கடுங்கோபங்கொண்டீர்" என்று வசனம் 5-ல் குறிப்பிடுகிறார். தேவன்

கோபங்கொண்டதை அவன் வெளிப் படுத்துகிறான். இதை சிலர் புரிந்து கொள்வதில்லை. தேவன் கோபங் கொள்வாரா? வேதம் மறுபடியும் மறு படியும் தேவன் பாவத்திற்கு எதிரானவர் என்று கூறினாலும் நாம் அதை நம்பு வதில்லை. அவர் அன்புள்ளவர் என்ற காரணத்தைக் காட்டி அவரது தூய்மை யால் பாவத்தை அவர் தண்டிக்கும் கட்டாயம் ஏற்படுகிறது என்பதை மறந்து விடுகிறோம். நெருப்புக்கோழி தலையை மணலுக்குள் புதைத்துக் கொள்வதால் வேடனிடமிருந்து தப்ப முடியாதே. அவர் அன்புள்ளவர்தான், ஆனால் பாவத்தைத் தண்டிக்கிறவர்.

தேவனுடைய கோபத்தை காற் றிற்கும், அக்கினிக்கும் அவர் ஒப்பிடு கிறார். வச.6, வச.7.

தேவ பிள்ளைகள் பாவத்தில் மூழ்கி ஆண்டவருக்கு நேராகக் குளிர்ந்து விடும்போது அவர்கள் ஒரு 'இலையைப் போல வாடிப்போகிறார்கள்'. அவர்களது ஆவிக்குரிய பெலன் குன்றத் தொடங்கி நியாயத்தீர்ப்பாகிய காற்றினால் அடி பட்டு போகிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பாகிய காற்று ஏசாயா காலத்து மக்களை பாபிலோனுக்கு எடுத்துச் சென்றது. தேவனற்ற அவர்கள் வாழ்வு தண்டனை பெற்றது. கர்த்தரு டைய வேதத்தில் பிரியமாயிருக்கிறவன் இலையுதிராத மரத்தைப் போலிருப் பான். ஆனால் துன்மார்க்கரோ காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போலிருப் பார்கள் சங்.1:4.

ஏசாயா அடுத்து அக்கினியின் உதாரணத்தைத் தருகிறார். அக்கிரமங் களுக்காக எங்களை தகனித்து விட்டீர் என்று கூறப்படுகிறது. அக்கினி நியாயத் தீர்ப்புக்கு அடையாளமாக வேதபுத்தகத் தில் குறிப்பிடப்படுகிறது. நியாயத்தீர்ப்பு மூலமாக வரும் வேதனை, மனஉளைச்சல் ஆகியவற்றை நெருப்பு அடையாளப் படுத்துகிறது. ஆனால் அக்கினியின் நியாயத்தீர்ப்பு நம்பிக்கையின் ஒரு பகுதியையும் சுமந்து வருகிறது. அக்கினி பொன்னை உருகச் செய்து அசுத்தங் களைச் களையச் செய்கிறது. நாம் தேவ பிள்ளைகள், தேவனுடைய எரிக்கும் அக்கினி நாம் புதுப்பிக்கப்பட ஏதுவா யிருக்கிறது.

தேவ கோபத்தைக் குறித்துக் குறிப்பிடும் ஏசாயா தேவனோடு விவாதிக்கவில்லை. அவர் தேவன் கோப மடைந்ததைக் குறிப்பிட்டாலும் அது தவறு எனக் கூறவில்லை. மக்களின் பாவங்களினிமித்தம் அவர் கோப மடைந்ததை அவர் விமர்சிக்கவில்லை. உண்மையான மனந்திரும்புதல் தேவனை மகிமைப்படுத்துவதோடு, அவரது உரிமை களுக்கு இடமளிக்கிறது. சுருக்கமாகக் கூறினால் மனந்திரும்புதல் என்பது ஒருவன் தேவனுக்கு எதிரான விவாதங் களை நிறுத்திவிட்டு, தான் (சிருஷ்டிகருக்கு) தேவனுக்கு முன்பாக ஒரு சிருஷ்டி என ஒத்துக் கொள்ள வேண்டும்.

தேவனுக்கு எதிராக நீங்கள் உங்களை நியாயப்படுத்தும் வரைக்கும் நீங்கள் மனந்திரும்புதல், சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியாது. "அது நியாயமல்ல, தேவன் இப்படி செய்திருக்கக் கூடாது" என்று பேசக் கூடாது. அது மனந்திரும் பாதவர்களின் மனப்போங்கு. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளுமல்ல வென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் . . . உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" ஏசா.55:8-9.

கர்த்தர் இறங்கி வர நாம் பாவத் திலிருந்து மனந்திரும்ப வேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு சரியானது என ஒத்துக் கொள்ள வேண்டும். எனவே இன்று நமது ஜெபம், "ஆண்டவரே இறங்கி வாரும், நாங்கள் உமக்கெதிராகக் குற்றம் செய்து விட்டோம்" என்பதா யிருக்கட்டும்.

---

## உபவாச ஜெபங்கள்... (2-ம் பக்கத் தொடர்ச்சி)

48 காணி கிராமங்களில் 7000 காணிக்காரர்கள் வாழ்ந்து வருகிறார்கள். கர்த்தருடைய கிருபையினால் இப்போது 21 காணி கிராமங்களில் ஆலயம் கட்டப்பட்டு ஆராதனைகள் நடை பெறுகிறது. 500-க்கும் மேற்பட்ட காணிக்காரர்கள் கர்த்தரை ஆராதிக் கிறார்கள். அவர்களில் 35 காணிக் காரர்கள் மிஷனெரிகளாக இணைந்து ஊழியம் செய்கிறார்கள்.

அதுபோல என்னுடைய தகப் பனார் காலஞ் சென்ற பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்கள், வருகையின் தூதன் அச்சிட 1969-ம் ஆண்டுக்கு முன், சொந்த அச்சகம் ஒன்றுக்காக ஜெபம் பண்ண ஆரம்பித்த போது, அப்பா ஜெபம் பண்ணி ஆண்டவர் ஒரு அச்சகத்தைக் கொடுப்பாரானால், இந்த உலகத்தில் ஜெபம் பண்ணி பெற்றுக் கொள்ள முடியாதது ஒன்றுமே இருக்க முடியாது என்று பிள்ளைகள் சொன்னார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கடந்த 47 ஆண்டுகளாக வருகையின் தூதன், சொந்த அச்சகத்தில் அச்சிடப் படுகிறது.

அதேபோல ஆண்டவர் கிருபை யாய் எங்களிடம், மாதந்தோறும் வெவ் வேறு இடங்களில 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்தச் சொன்னபோது, "உங்களுக்கு யார் உதவி செய்வார்கள்" என்று என்னுடைய பிள்ளைகள் சொன் னார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், தேவனுடைய அளவற்ற இரக்கத்தால் டிசம்பர் 2-ம் தியதி, 2017-ம் ஆண்டின் இறுதி உபவாச ஜெபத்தையும் சேர்த்து, இரண்டு ஆண்டுகள் 24 உபவாச ஜெபங் களை தொடர்ச்சியாக நடத்தியுள் ளோம். குமரி மாவட்டத்தை புயல் புரட் டிப் போட்டது. சுமார் 25,000 மரங்கள், 6,000 மின் கம்பங்கள் சாய்ந்தன. எனவே நாகர்கோவில் பட்டணத்தில் சுத்தமாக இரண்டு இரவு, இரண்டு பகல் மின்சாரம் இல்லை. உபவாச ஜெபம் நடைபெற்ற மார்த்தாண்டம் பகுதியில் குடிக்க, குளிக்க தண்ணீர் இல்லை. ரொட்டி பால் தானும் இல்லை. போக்குவரத்து முற்றிலும் நடைபெறவில்லை. இந்த ஆசிரியர் கடிதத்தை எழுதும் வரை மரங்கள் முற்றிலும் அகற்றப்படவில்லை. ஆயினும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், சபையின் ஜெனரேட்டர் வசதியோடு மத்தியானம் 3 மணி வரை உபவாச ஜெபம் நடைபெற்றது.

### எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

உபவாச ஜெபங்கள் ஒவ்வொரு இடங்களிலும் நடத்துவதற்கு ஆகும் செலவினங்களை உங்களோடே பகிர்ந்து கொள்கிறேன். 1. Speed Post அல்லது கொரியர் மூலம் தொடர்பு கொள்ளுதல் 2. ஜெப அட்டைகள் PRAYER CARD அச்சிட்டு அனுப்புதல் 3. பதிவுதாள் அச்சிட்டு அனுப்புதல், 4. உபவாச ஜெபம் நடைபெறும் இடங்களுக்கு, அது எவ்வளவு தூரமானாலும் முன் கூட்டியே எனது மகன் சாமுவேல் நேரில் சென்று கூட்டம் நடத்துவதற்கான ஒழுங்குகளை செய்தல் 5. பாடல் புத்தகம், Badge போன்றவற்றை அச்சிடு வது, 6.பிரயாண செலவு 7. சில இடங் களில் தங்குவதற்கான வசதி.

இதில் பிரயாண செலவே அதி கம். உதாரணமாக T.R.பட்டினம் போக இலவசமாக வேன் கிடைத்தது, ஆனால் பெட்ரோல் செலவு மாத்திரம் ரூ.8000 ஆனது. இதுபோல மும்பை, அந்தமான் போன்ற இடங்களுக்கு குறைந்தது 5 பேர், அதிகபட்சம் 7 பேர் செல்லு வதற்கான செலவை வாசகர் அறிந்து கொள்வதற்காக 2-ம் பக்கம் உள்ள கட்டத்தில் "பிரயாண செலவு" (உத்தேச மாக) அச்சிடப்பட்டுள்ளது. தேவனு டைய பிள்ளைகள் இதற்காக பாரத் தோடு ஜெபிக்குமாறு பட்சமாய் கேட் கிறேன்.

அந்தமானில் **சிஸ்வா சபை, அசெம்பிளி ஆப் காட் சபை, ஷைலோ மிஷன் சபை** ஆசிய மூன்று சபைகளை தொடர்பு கொண்டுள்ளோம். அந்தமானில் உபவாச ஜெபத்தை நடத்துவதற்கான ஆயத்தங்களை செய்ய மகன் சாமுவேல் பெப்ரவரி மாதம் செல்வதற்கு ஆயத்தப் படுகிறோம்.

### எழுப்புதலுக்காக ஜெபிக்க 100 பேர்
### Revive 100

வேத வினா போட்டியில் சரி யான விடை எழுதுபவர்களுக்கு பரிசுகள் வழங்குவது போல, உங்களை உற்சாகப் படுத்த 10 பேர்களுக்கு அழகான பரிசு அனுப்பப்படும் என்று எழுதியிருந்தேன். ஒரு சிலர் பதிவு செய்துள்ளீர்கள். கர்த்தருக்குச் சித்தமானால் 2018- ம் ஆண்டுக்குள் உண்மையாய் ஜெபிக்கிற 100 ஜெபவீரர்களைக் கண்டு பிடித்து, தேசத்திற்காக முழு இருதயத்தோடு ஜெபிக்க விரும்புகிறேன். அதன் ஆரம்ப மாக ஜெபிக்க விரும்பும் சில அன்பான தேவ பிள்ளைகளின் **பதிவு எண்களை** கீழே வரிசைப்படுத்தியுள்ளேன். நீங்களும் இந்த ஜெப ஊழியத்தில் இணையுமாறு அதிக அன்பாய் அழைக்கிறேன். இன்ன மும் தேசத்திற்காக ஜெபிக்க விரும்புகிற 10 வாசகருக்கு All About Jesus என்கிற அழகான பரிசை அனுப்புவேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | CN 00536 | M | சென்னை |
| 2. | KK 04765 | M | ஆரல்வாய்மொழி |
| 3. | MD 01090 | M | மதுரை |
| 4. | VN 00980 | M | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 5. | TN 02014 | S | தச்சநல்லூர் |
| 6. | NI 01279 | M | குஜராத் |
| 7. | NC 01088 | M | நாகர்கோவில் |
| 8. | MD 00661 | Y | மதுரை |
| 9. | VN 00947 | S | சாட்சியாபுரம் |
| 10. | CN 02362 | Y | சென்னை |
| 11. | TJ 00275 | R | சீர்காளி |
| 12. | CN 01915 | S | சென்னை |
| 13. | TN 01607 | Y | திருநெல்வேலி |

**வயது 70**
**Pray 70**

உங்களில் சிலர் தொடர்பு கொண்டீர்கள். உங்கள் பதிவு எண்களை கீழே வரிசைபடுத்தியுள்ளேன். "**நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.** தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திர வத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" 2கொரி.1:3,4.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | TC 00645 | Y | பரமன் குறிச்சி | 88 |
| 2. | TC 01709 | R | தூத்துக்குடி | 81 |
| 3. | TC 01246 | S | தூத்துக்குடி | 74 |
| 4. | SG 00149 | Y | சிவகங்கை | 82 |
| 5. | TN 00694 | S | பாளையங்கோட்டை | 82 |
| 6. | SA 01621 | S | பாண்டிச்சேரி | 73 |
| 7. | MD 01101 | S | மதுரை | 75 |
| 8. | CN 01207 | | சென்னை | 97 |
| 9. | NC 00986 | S | நாகர்கோவில் | |
| 10. | KR 00753 | R | எர்ணாகுளம் | 72 |
| 11. | CN 02362 | Y | சென்னை | 77 |
| 12. | CN 00668 | G | சென்னை | 75 |
| 13. | TJ 00275 | R | சீர்காளி | 70 |
| 14. | SM 01889 | S | சேலம் | 82 |
| 15. | KK 04677 | | சுசீந்திரம் | 84 |
| 16. | TN 01607 | Y | திருநெல்வேலி | 82 |

*"அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப் பார்கள்". சங்.92:15.*

**மாதந்தோறும் தாங்கும் 300 பேர்**
**Mission 300**

வருகையின் தூதன் ஊழியத்தை உங்களில் சிலர் மாதந்தோறும் தாங்குகிறீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. ஊழியம் வளர வளர அதன் தேவைகளும் அதிகரிக்கிறது.

வருகையின் தூதன் பத்திரிகையை ஆரம்பித்த தேவ மக்கள் அதனை "**அச்சிட்ட மிஷனெரிகள்**" (Printed Missionaries) என்றே அழைத்தார்கள். இந்த அச்சிட்ட மிஷனெரிகள் மாதந்தோறும் வெளிவர ஆரோனும் ஊரும் போல அநேகர் தேவை.

"மோசேயின் கைகள் அசந்து போயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டு வந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந் தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கி னார்கள்; யாத்.17:12.

பின்பு, அவர் (இயேசு) பட்ட ணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனே கூட இருந்தார்கள்.

ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், **தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த** மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந் தார்கள். லூக்கா 8:1-3

### 2018– ம் ஆண்டு தூதன் தேவையா?

*29-11-17*

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் சகோ.வெஸ்லி தேவதாசன் அவர்களுக்கு மத்திய சிறை பாளையங்கோட்டையிலிருந்து அருளின கடிதம்.

தேவ கிருபையினால் (லூக்கா 7:22-ன் பின் பகுதியின்படி) "தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது" என்று இயேசு சொன்னது போல ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் தரித்திரர்களாய் ஆவிக்குரிய போதகம், சத்தியம், பிரசங்கங்கள் கிடைக்காத இந்த இடத்தில் உண்மையாகவே தங்களது "வருகையின் தூதன்" என்ற மாத இதழ் அநேகர் இரட்சிக்கப்படவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடையவும் உதவியாக இருந்தது. வருகையின் தூதன் புத்தகம் வந்ததும் ஓய்வின்றி ஒருவர் மாற்றி, ஒருவராக படித்து பயனடைந்து கொண்டே இருக்கிறோம். இந்நிலையில் வருகையின் தூதன் புத்தகம் 2018-ம் ஆண்டிற்கும் தொடர்ந்து வேண்டுமானால் தொலைபேசி எண்ணுக்கு Call செய்தோ (or) SMS அனுப்பியோ தெரிவிக்க வேண்டும் என எழுதியிருந்தீர்கள்.

இங்கேயிருந்து நாங்கள் Call பண்ணி தெரிவிக்கவோ (or) SMS அனுப்பவோ முடியாது ஆகவே இந்த கடிதத்தை எழுதுகிறேன். TN.01349F, TN.00657 என்ற நம்பர் முகவரியை கொண்ட இரண்டு புத்தகத்தையும் நிறுத்தாமல் அதை தொடர்ந்து எங்க ளுக்கு அனுப்பி தரவும் கூடுமானால் கீழ்காணும் எனது முகவரிக்கும் ஒரு புத்தகத்தை தயவாய் அனுப்பி தரும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன். "இதற்கான அறுவடையை நிச்சயமாக நீங்கள் பரலோகத்தில் காண்பீர்கள்". தொடர்ந்து நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து ஜெபத்தில் ஒருவரையொருவர் தாங்கிக் கொள்வோம் "வருகையின் தூதன்" ஒவ்வொரு பகுதி யில் உள்ள பிரசங்கங்களும் மிகவும் ஆறுதலாகவும் கண்ணீரைத் துடைத்து இரட்சிப்பை கொடுக்கிறது.

★★★★★★★★

*2017-ம்* ஆண்டுடன் தபால் சலுகை முடிவடைந்தது. அடுத்த ஆண்டு தபால் சலுகை கிடைக்குமா என்பது தெரியவில்லை. தபால் சலுகை கிடைத்தால் அனைவருக்கும் அனுப்புவோம். தபால் சலுகை கிடைக்காவிட்டால் ரூ.4.00 தபால் தலை ஒட்டி தேவையான வர்களுக்கு மட்டும் அனுப்புவோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக

*2018-ம்* ஆண்டு, நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

| | | |
|---|---|---|
| **Office** | : 95432 21008 | **Time:** |
| **Associate** | : 94897 40295 | 10.00 a.m to 1.00 p.m |
| **For Prayer** | : 94980 30295 | 02.00 p.m to 6.00 p.m |
| **Editor** | : 04652 403295 | Sunday Holiday |


நமது ஆண்டவராகிய
## இயேசு வருகிறார்!
**Our Lord Jesus Christ is coming**

கிறிஸ்துவும். . .இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் எபி.9:28.

"நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" வெளி.22:13. அவர் "உண்மையும் சத்தியமுமுள்ளவர் என்னப்பட்டவர் வெளி.19:11. அவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார்" வெளி.17:14. "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" கொலோ.1:15. இவர் அவருடைய மகிமையின் பிரகாசம் எபி.1:3.

நம்மில் அன்புகூர்ந்து, தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தவர் 1யோ.3:16. மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், நான் மரணத்திற்கும் பாதாளத் திற்குமுரிய திறவுகோலை உடையவராயிருக்கிறேன்" வெளி.1:18 என்றவர், நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கிறவர் கலா.1:4. "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர்" 1தெச.1:10.

அவர் நமது ஜீவன் கொலோ.3:4. "அவரே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்" 1கொரி.1:31. நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே எபி.12:2.

" . . . நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டீர்" வெளி.5:9 . "அவரே வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப்பாத்திரராயிருக்கிறார்" வெளி. 5:12.

## எழுப்புதலுக்காக

### ஆண்டவரை நோக்கிப் பார்த்தல்

**Looking to the Lord for Revival**

Rich Carmicheal

எழுப்புதல் கூடாதது அல்ல. தேசத்தில் வீழ்ச்சிகளும், பிளவுகளும் மலிந்து வருகின்றன. உண்மையுள்ள வரும், ஜீவனுள்ளவருமான தேவனை மக்கள் மறந்து விட்டனர். அவரது வார்த்தையும் அவரும் கனப்படுத்தப் படவில்லை. “என் பெலனும், நான் கர்த்தருக்கு காத்திருந்த நம்பிக்கையும் அழிந்து போயிற்று” என்று புலம்பினா லும் “கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரி டத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்” என்றும் களிகூரமுடியும் புலம்பல் 3:18, 24. நமது தேவன் மரணத்திலிருந்து ஜீவனைக் கொண்டு வரக்கூடியவர் எசேக்.37:1-14. அவர் ஆற்றப்பட முடியாத கொடிய புண்களை ஆற்று வார். எரே.30:12-17. அவர் இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கக் கட்டளை யிடுகிறவர் 2கொரி.4:6. அவர் “உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும் பள்ளத்தாக்கு களின் நடுவே ஊற்றுகளையும் திறந்து வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும் வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கு கிறவர்” ஏசா.41:18.

இன்னமுமாக கர்த்தரை நம்பி எழுப்புதலுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கிற மக்கள் தேசத்திலுண்டு. வேதபுத்தகத்திலிருந்தும், சபை சரித்திரத் திலிருந்தும், தேவ பிள்ளைகள் அவருக்கு நேராகத் திரும்பும்போது பெரிய காரியங்கள் நடைபெறும் என்பதை நாம் அறிவோம். நாம் நம்மைத் தாழ்த்தி, ஜெபித்து அவர் முகத்தைத் தேடி மனந்திரும்பும்போது அவர் மன்னித்து, நம்மை குணமாக்கி இரட்சித்து எழுப்பு தலைக் கட்டளையிடுவார்.

எனவே இந்த இதழில் தேசங்கள் மனந்திரும்பவும் ஜெபிக்கவும் தூண்டு தலான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேவன் தாமே தமது பெரிய இரக்கத்தால் உலகமெங்கும் ஆவிக்குரிய எழுப்புதலைக் கட்டளையிடுவாராக. அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் மீட்படையட்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விரைவில் வரப் போகிறார்.

## பத்திரிகை செய்திகள்

*அக்டோபர் மாத நிலவரம்*

### தொலைபேசி இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 120.17 கோடி

டிச.- 14

**டிராய் புள்ளி விவரங்கள்**

டிராய் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் வருமாறு

நம் நாட்டில், செப்டம்பர் மாத இறுதியில், செல்போன் மற்றும் லேண்டுலைன் இணைப்பு களின் மொத்த எண்ணிக்கை 120.67 கோடியாக இருந்தது. அக்டோபர் மாதத்தில் சுமார் 1.75 கோடி இணைப்புகள் குறைந்த நிலையில் இது 120.17 கோடியாக குறைந்து இருக்கிறது.

அக்டோபர் மாதத்தில் ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் நிறுவனம் அதிகபட்சமாக 73.40 லட்சம் செல்போன் இணைப்புகளை வழங்கி இருக்கிறது. வோடாபோன் 8.79 லட்சம் இணைப்புகளையும், ஐடியா செல்லுலார் நிறுவனம் 7.13 லட்சம் இணைப்புகளையும் வழங்கி இருக்கின்றன.

பார்தி ஏர்டெல் நிறுவனம் இதுவரை வழங்கி உள்ள மொத்த இணைப்புகள் 28.52 கோடியாகும். அடுத்து வோடாபோன் நிறுவனம் 20.83 இணைப்புகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. மூன்றாவது இடத்தில் உள்ள ஐடியா செல்லுலார் மொத்தம் 19.09 கோடி இணைப்பு களை வழங்கி இருக்கிறது.

**செல்போன் இணைப்புகள்**

அக்டோபர் மாதத்தில் செல்போன் இணைப்புகளின் எண்ணிக்கை மட்டும் 48.5 லட்சம் குறைந்து 117.82 கோடி என்ற அளவில் உள்ளது. இதில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் அதிகபட்சமாக 1.09 இணைப்புகளை இழந் திருக்கிறது. அடுத்து டாட்டா டெலிசர் வீசஸ் 47.11 லட்சம் இணைப்புகளை இழந்துள்ளது. டெலிநார் 11.44 இணைப்புகளையும், சிஸ்டெமா ஷியாம் 2.31 லட்சம் இணைப்புகளையும் இழந்திருக் கின்றன. எம்.டி.என்.எல். நிறுவனம் 11,520 இணைப்புகளை இழந்துள்ளது.

லேண்டுலைன் இணைப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது. செப்டம்பர் மாதத்தில் இந்த இணைப்புகளின் எண்ணிக்கை 2.36 கோடியாக இருந்தது அக்டோபர் மாதத்தில் இது 2.35 கோடியாக குறைந்துள்ளது. அந்த மாதத்தில் பொதுத் துறையைச் சேர்ந்த பீ.எஸ்.என்.எல். நிறுவனம் அதிகபட்சமாக 1.23 லட்சம் இணைப்புகளை இழந்திருக்கிறது.

எனினும் இதே காலத்தில் அகன்ற அலைவரிசை இணைப்புகளின் எண்ணிக்கை 4.7 சதவீதம் உயர்ந்து (32.48 கோடியில் இருந்து) 34 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் ஐந்து முன்னணி நிறுவனங்கள் 92.17 சதவீத பங்கினைப் பெற்றுள்ளன.

இவற்றுள் ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் அதிகபட்சமாக 14.59 கோடி இணைப்புகளை வழங்கி முதலிடத்தில் இருக் கிறது. பார்தி ஏர்டெல் 6.69 கேடி இணைப்பு களுடன் இரண்டாவது இடத்திலும், வோடாபோன் 4.84 கோடி இணைப்புகளுடன் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன. ஐடியா செல்லூலார் (3.1 கோழி) மற்றும் பீ.எஸ்.என்.எல் (2.12 கோழி) முறையே 4 மற்றும் 5-வது இடங்களில் உள்ளன.

இவ்வாறு டிராய் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

**ஜி.எஸ்.எம்., சி.டீ.எம்.ஏ**

ஜி.எஸ்.எம். மற்றும் சி.டீ.எம்.ஏ ஆகிய இரண்டு தொழில் நுட்பங்களில் செல்போன் சேவை வழங்கப்படுகிறது. ஜி.எஸ்.எம் தொழில் நுட்பத்தில், ஒரே செல்போன் சாதனத்தில் பல்வேறு நிறுவனங்களின் ‘சிம்’ கார்டுகளை பயன்படுத்தி பேச முடியும். ஆனால் சி.டீ.எம்.ஏ தொழில் நுட்பத்தில் செல்போன் சாதனம் வழங்கும் நிறுவனமே ‘சிம்’ கார்டையும் வழங்கும். எனவே இந்த தொழில் நுட்பத்தில் ஒரு சாதனத்தில் வேறு நிறுவனங்களின் ‘சிம்’ கார்டை பயன்படுத்த இயலாது.

பார்தி ஏர்டெல், வோடாபோன், ஐடியா செல்லுலார் பீ.எஸ்.என்.எல்., ஏர்செல் ஆகிய நிறுவனங்கள் ஜி.எஸ்.எம் தொழில்நுட்பத்தில் மட்டும் செல்போன் சேவை அளிக்கின்றன. ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ், டாட்டா டெலி சர்வீசஸ் ஆகிய நிறுவனங்கள் ஜி.எஸ்.எம்., சி.டீ.எம்.ஏ ஆகிய இரண்டு தொழில்நுட்பங் களிலும் சேவை வழங்குகின்றன. (தினத்தந்தி

**சமாதானம்**

சமாதானமற்ற உலகில் வாழும் நாம் பல வேளைகளில் கலங்கி நம்பிக்கை அற்றவர் களாகி சோர்ந்து போகிறோம். காரணம் நம்மை பல காரியங்கள் ஆளுகை செய் கிறது. உதாரணமாக பணப்பிரியன் பணத் தினால் திருப்தியடைவதில்லை. எப்படி பணம் சம்பாதிக்கலாம் என்றும், சம்பாதித்த பணத்தை, பொருட்களை எப்படி காப்பாற்று வது? என்று கவலைப்பட்டு சமாதானத்தை இழந்து போகிறான். ஆனால் தேவ சமா தானம் நம்மை ஆளும்போது நாம் எதைக் குறித்தும் கவலைப்படாதபடி சமாதானத்தில் தேவன் நம்மை காத்து சமாதானத்தை தந்து நம்மை ஆளுவார். தீமையான, தீங்கான காரியங்களை செய்யாமல் நன்மையே செய்ய உதவுவார். அதன் மூலம் பிறர் பயனடைவார்கள். நாமும் சமாதானமாய் வாழ்வோம்.

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Postal Reg. No. KKI/63/2015-2017**
**Date of Publication : 27th of Every month**
**Date of Posting : 27th & 28th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To